

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (13.09.2025) தலைமைச் செயலகத்தில், "உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், முகாமில் பெறப்பட்ட மனுக்களின் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், முதல்வரின் முகவரித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் / சிறப்பு அலுவலர் திருமதி பெ. அமுதா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.9.2025) முகாம் அலுவலகத்தில், பெரியார் நூல் வெளியீட்டகத்தின் மேலாண்மை இயக்குநர் ஆனை. பன்னீர்செல்வம், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகள் ப.ஆசுபள் மற்றும் மருமகன் மருத்துவர் சா.பா. தமிழ்மாறன் ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷா நவாஸ் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி

# நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்டுவர துரித நடவடிக்கை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, செப்.14–

நேபாள நாட்டில் சிக்கியுள்ள தமிழர்களின் நிலைகுறித்து அறிந்திடவும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கிடவும் உரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேபாள நாட்டில் சிக்கியுள்ள தமிழர்களின் நிலை குறித்து அறிந்திடவும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி அவர்களை மீட்டுவருவதற்கு, புதுதில்லி, தமிழ்நாடு இல்லத்தில் 24x7 கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை மற்றும் நேபாள நாட்டிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு, தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளை மீட்டுவர புதுதில்லி, தமிழ்நாடு இல்ல அதிகாரிகள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

நேபாளத்திற்கு சுற்றுப்பயணம் செய்த தமிழ்நாட்டைச் சார்ந்த 116 நபர்கள் பத்திரமாக 11.09.2025 அன்று இந்தியாவிற்கு திரும்பி விட்டனர்.

மேலும், நேபாளத்தில் சிக்கித் தவித்து வரும் தமிழர்கள் தங்களது விவரங்களை தெரிவிக்கவும், நேபாளத்தில் சிக்கியுள்ள தங்களது குடும்ப உறுப்பினர்களின் நிலை குறித்து தெரிந்து கொள்வதற்கும் புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள 24x7 கட்டுப் பாட்டு அறை எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 011–24193300

கைபேசி எண்: 9289516712 (whatsApp)

மின் அஞ்சல்: tnhouse@tn.gov.in, prcofficetnh@gmail.com என தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.




